செப்டம்பர் திங்களில் சென்னையில் நடைபெற்ற, தமிழ் நாடு அரசு உயர்நிலைப் பள்ளி (கழக) தலைமை ஆசிரியர்களின் சிறப்பு மாநாட்டில், கேட்கப்பட்டுள்ள தென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அரசு ஆணை எண் 399, கல்வி, நாள் 21—3—72-ல் முன்னுள், கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்த ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத ஊழி யர்களை 1—4—1070 முதற்கொண்டுதான் அரசுப் பணியில் எடுத்துக் கொள்ளப் பட்டது என்றும், 1—4—1966 முதல் எடுத்துக்கொள்ள இயலாது என்றும் ஏற்கனவே ஆணையிடப்பட்டுள்ளது.

Resolutions passed by the Madras City Specialist Teachers Association.

* 244 *Q.*—PULAVAR O. ARIVUDAI NAMBI (ON BEHALF OF THIRU K. ARIVAZHAGAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the resolutions passed by the Madras City Specialist Teachers Association on 20th October 1973 have been brought to the notice of the Government ; and

(*b*) if so, the action taken thereon ?

சென்னை மாநகர் சிறப்பாசிரியர் கழகத்தின் தீர்மானங்கள்

புலவர் ஓ. அறிவுடைநம்பி (திரு. க. அறிவழகன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 20—10—1973 அன்று நடைபெற்ற சென்னை மாநகர் சிறப்பாசிரியர் கழகத்தின் தீர்மானங்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தீர்மானங்களின் நகல் ஒன்று பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பெறப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(இ) தீர்மானங்களின்மேல் பள்ளிக் கல்வி இயக்குநர் குறிப்புரைகள் அனுப்பியுள்ளார். அவை அரசின் ஆய்வில் உள்ளன.

Model Schools

*245. Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether the Government have any proposals to offer incentives to the private sector for opening model schools in the State; and

(b) if so, the details thereof?

மாதிரிப் பள்ளிகள்

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) இம்மாநிலத்தில் மாதிரிப் பள்ளிகளைத் தொடங்க தனியார் துறைக்கு ஊக்கம் அளிப்பதற்கான செயற்குறிப்புகள் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. அய்யணன் அம்பலம்: தலைவர் அவர்களே, மாதிரிப் பள்ளி என்றால் என்ன? அதிலுள்ள கல்வித் திட்டத்தில் ஏதாவது மாற்றங்கள் உண்டா? அதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாதிரிப் பள்ளி என்று இரண்டு இடங்களிலே இப்பொழுது வைத்திருக்கின்றோம். புதுக்கோட்டையிலே ஆண்களுக்கும், சென்னையிலே பெண்களுக்கும் இருக் கின்றது. அதிலே தலைமை ஆசிரியர்களாக இருப்பவர்கள் பேராசிரியர்கள் அளவுக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே பணிபுரிகிறவர்களை பி.எ., பி.டி.-க்குப் பதில் எம்.எ., பி.டி. படித்தவர்களாக வைத்து, மாநிலம் முழுதும் ஒரு தேர்வு நடத்தி, அதிலே அதிக எண்கள் வாங்குகிறவர்களை மட்டும் அந்தப்